உ
சிவமயம்

# செய்தி மடல்

## அகில இலங்கை இந்து மாமன்றம்
## ALL CEYLON HINDU CONGRESS

விரோதி வருடம்
மார்கழித் திங்கள்
26ம் நாள்
10.01.2010

தலைமையகம் : இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-02. இலங்கை
தொலைபேசி : 011 2434990 – தொலைநகல் : 011 2344720, மின்னஞ்சல்: hinducongress@gmail.com

## மலரும் தைத்திங்கள் புலரும் பொழுதாக அமையப் பிரார்த்திப்போம்!

### இந்த மடலில்....





நாவலர் நினைவு தின நிகழ்வின்போது பூசை வழிபாடு,
இந்து ஒளி சிறப்பிதழ் வெளியீடு (பக்கம் - 03)

### மாமன்றத்தின் தைப்பொங்கல் செய்தி

இந்து மக்களின் முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாக தைப்பொங்கல் சிறப்புப் பெறுகிறது. உலகில் இருள் நீக்கி ஒளி வழங்கும் ஓர் உன்னத சக்தியாகவும், மக்களுக்கு வாழ்வளிக்கும் தெய்வமாகவும் போற்றப்படும் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதன் மூலம் தைப்பொங்கலை எமது மக்கள் பக்தி பூர்வமாகவும், தமிழர் திருநாள் என்ற வகையில் குதூகலமாகவும் கொண்டாடி மகிழ்வது நீண்டகாலப் பாரம்பரிய வழக்கமாகும். இந்நாள் தைமாதப் பிறப்பாகவும் அமைவது சிறப்புக்குரியதாகும்.

ஆனால், தமிழ் மக்கள்–எங்கள் உடன் பிறப்புகள் – கடந்த காலங்களில் அனுபவித்து வந்த வேதனைகளையும் சோதனைகளையும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. அத்தகையதொரு துரதிர்ஸ்டவசமான நிலை இன்னும் முழுமையாக நீங்கவில்லை என்பதை மறவாது, இன்னமும் அதன் தாக்கத்தினால் வருந்தும், எங்களது சகோதர சகோதரிகளுக்கு உதவுவது எங்கள் கடமையாகும்.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற பாரம்பரிய சொற்றொடருக்கு அமைய உரிய நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் வைத்து தைத்திங்கள் வரவேற்கப்படுகிறது. மலரும் தைத்திங்கள் தமிழ் மக்களுக்கு வாழ்வில் ஒளிமயமான எதிர்காலத்துக்குரியதாக அமையவேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனையாக இருக்கிறது. தமிழ் மக்கள் சுதந்திரத்துடனும் சுயமரியாதையுடனும் மட்டுமல்ல நிம்மதியாகவும், மகிழ்ச்சிகரமாகவும் வாழும் சூழ்நிலை ஏற்படவேண்டும். அது நிரந்தரமாகவே அமையவேண்டும்.

கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக சோதனைகளையும், வேதனைகளையும் அனுபவித்து வரும் எங்கள் சகோதர சகோதரிகளுக்கு எங்களாலான நிவாரண உதவிகளை வழங்கி வந்திருப்பதுடன் அவர்களுக்காக மாமன்றத்தின் சார்பாக தயங்காது குரல் கொடுத்து வந்திருக்கிறோம். கடந்த சில மாதங்களாக எங்கள் மக்கள் பாரிய இடப்பெயர்வுகளுக்கும் பெரும் இன்னல்களுக்கும் ஆளாகியபோது பல்வேறு வழிகளில் அவர்களுக்கு உதவியிருக்கிறோம்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## தைப்பொங்கல் சிறப்புப் பூசை வழிபாடு

மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு தைப்பொங்கல் தினமான இம்மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை, சிறப்புப் பூசை வழிபாடுகள் நடத்தப்படவிருக்கின்றன. அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் மாமன்றத் தலைமையக வளவில் ஆரம்பமாகும் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைக்கும் நிகழ்வைத் தொடர்ந்து, நண்பகல் 12.30 மணிக்கு பிரார்த்தனை மண்டபத்தில் விசேட பூசை, வழிபாடுகள் இடம்பெறும்.

மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும்படி மாமன்றம் அன்புடன் அழைக்கிறது.

உள்ளே பஞ்சாங்க நாட்காட்டி (2010) இணைக்கப்பட்டுள்ளது.

## வாழ்த்து

பாரினி லுள்ளோ ரெல்லாம் பக்தியும் அன்பும் பொங்கிச்
சீரிய செல்வம் பெற்றுச் சிறப்புட னினிது வாழ்க
காரிருட் கமலக் கண்ணன் கனவிலும் காண வொண்ணாப்
பேரருளாளன் பெம்மான் மலரடி வாழ்த்தி நிற்பாம்!

**விரோதி வருடம் மார்கழித் திங்கள் 26ம் நாள் (10.01.2010)**

# மாமன்றத்தின் குரல்

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு வணக்கம். சோதனைகளும், வேதனைகளும் நிறைந்த 2009ம் ஆண்டுக்கு விடை கொடுத்துவிட்டு, மலர்ந்திருக்கும் ஆங்கிலப் புதுவருடமான 2010ம் ஆண்டில் மற்றுமொரு செய்தி மடல் ஊடாக உங்களைச் சந்திக்கிறோம்.

இன்னும் சில தினங்களில் தைத்திங்கள் உதயமாகவிருக்கிறது. ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்ற பாரம்பரிய சொற்றொடரின்படி புதிய எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் வைத்து மலரும் தைத் திங்களை வரவேற்பதற்கு இந்து மக்களாகிய நாம் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் மக்கள் – எங்கள் உடன் பிறப்புகள் – கடந்த காலங்களில் அனுபவித்து வந்த துன்பங்களும் துயரங்களும் மீண்டும் ஏற்படக்கூடாது; கடந்துபோன இருள்மயமான நிலை மீண்டும் தோன்றக் கூடாது. மலரும் தைத்திங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்குரியதாக அமையவேண்டும் என்பதே இந்து மக்களது பெருவிருப்பாக அமைந்துள்ளது.

மலரவிருக்கும் தைத்திங்களுடன் இணைந்த வகையில், இந்து மக்களின் தனித்துவமிக்க பண்டிகையாக பெருமைபெறும் தைப்பொங்கலும் வருகிறது. உலகின் கண்கண்ட தெய்வமாக, இருள் நீக்கி ஒளி வழங்கும் ஒரு உன்னத சக்தியாகத் திகழும் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதன் ஊடாக சைவத்தமிழ்ப் பாரம்பரியம் பேணப்பட்டு வருவதும் சிறப்பான அம்சமாகும்.

தமிழ் மக்கள் அனைவரினதும் வாழ்வில் மகிழ்ச்சியும், நிம்மதியும், விமோசனமும் கிடைப்பதற்கு மலரும் தைத்திங்கள் வழிவகுக்க வேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!

**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்.*

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நிவாரண முகாம்களில் தங்கியிருந்த எங்கள் மக்களுக்காக மாமன்றத்தின் சார்பாக பாரெல்லாம் வேண்டுகோள் விடுத்து உதவிகள் பெற்றுக்கொடுத்து வருகிறோம். இடம்பெயர்ந்த முதியோர்கள், மாணவர்கள், சிவாச்சாரியார்கள் ஆகியோருக்கு பல வழிகளிலும் உதவி வருகிறோம். இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதுடன் மாமன்றத்தின் பராமரிப்பிலுள்ள இரத்மலானை மாணவர் விடுதியில் அவர்களை இணைத்து பராமரிப்பதற்கான வசதிகளையும் செய்துள்ளோம். இடம்பெயர்ந்த யாழ். பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக நிதியுதவி செய்து வருவதையும் குறிப்பிட விரும்புகிறோம். மாமன்றத்தின் வேண்டுகோளுக்கு சாதகமான வழிகளில் உதவிய அரசாங்கத்திற்கும், லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் அறங்காவல் சபையினருக்கும், மனிதநேய நிதியத்திற்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி வரும் இந்து மக்கள் அனைவருக்கும் மாமன்றத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் சகோதர சகோதரிகள் அனுபவித்து வரும் துயரங்கள் மிக விரைவில் முழுமையாக நீங்கி, அனைவரும் பூரண விமோசனம் பெற்று வாழ்வில் நிம்மதியும், மகிழ்ச்சியும் சேர்ந்த ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாகவேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை பிரார்த்திக்கின்றோம். துன்பப்படும் எங்கள் மக்களுக்கு விமோசனம் வேண்டி சகல இந்து மக்களும் தைப்பொங்கல் தினத்தன்று வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் ஈடுபடுமாறு மாமன்றத்தின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

# சிவராத்திரி விரதம் எப்போது?

இவ்வருட சிவராத்திரி விரத தினம் இரு பஞ்சாங்கங்களிலும் வெவ்வேறாகக் காணப்படுவதால், இந்து மக்கள் பலர் குழப்பமடைந்த நிலையில் எப்போது சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் கேட்டு வருகிறார்கள். அதற்குரிய சரியான பதிலை வழங்கவேண்டிய பொறுப்பு இந்து மாமன்றத்திற்கு இருக்கிறது.

இவ்வருடம் மார்ச் 13ம் திகதியன்றே மகாசிவராத்திரி என்பதை அரசாங்கம் குறிப்பிட்டு, அதனை அரச விடுமுறையாக பிரகடனம் செய்வதற்கு முன்பதாகவே, இந்து மாமன்றம் சமய அறிஞர்கள் பலருடன் இதுபற்றி கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படியும், இந்தியாவிலுள்ள திருவண்ணாமலை, இராமேஸ்வரம் போன்ற திருத்தலங்களில் மகாசிவராத்திரி பூசை வழிபாடுகள் நடத்தப்படும் தினத்தையும் கவனத்தில் கொண்டும் மார்ச் 13ம் திகதியன்றே மகாசிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பது பொருத்தமானது என்று இந்து மாமன்றம் வலியுறுத்தியிருந்தது. அத்துடன், 2010ம் ஆண்டுக்குரிய அரச விடுமுறை தினங்களை கணிப்பது தொடர்பாக பதிவாளர் நாயகத்தால் 2009 மே மாதம் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த அகில இலங்கை இந்து மாமன்றப் பிரதிநிதியாலும் இதே கருத்து முன்வைக்கப்பட்டது.

எனவே மார்ச் 13ம் திகதி சனிக்கிழமையன்றே மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படவேண்டும் என்பதை அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றது.

# மாமன்றத்தின் அஞ்சலி

## சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்

இந்துப் பெருமக்களின் பெருமதிப்பிற்கும் போற்றுதலுக்குமுரிய இலங்கையின் மூத்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களின் மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

இவர் இந்து மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்பையும், உறவையும் கொண்டிருந்தவர். மாமன்றத்தின் பல நிகழ்வுகளில் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார். உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் பல இந்து ஆலயங்களில் கும்பாபிஷேக கிரியைகளை சிறப்பாக நடத்தி வைத்துள்ள பெருமைக்குரியவர். இவரது மறைவு இந்து உலகத்திற்கு பேரிழப்பாகும்.

சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களின் மறைவையிட்டு, அன்னாரின் குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## திருமதி சிவஞானகிப்பிள்ளை கனகரத்தினம்

மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்களான திருமதி வசந்தகௌரி விமலேந்திரன் அவர்களின் தாயாரும், திரு.பொன். விமலேந்திரன் அவர்களின் மாமியாருமான திருமதி சிவஞானகிப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் கடந்த (2009) டிசெம்பர் மாதம் 8ம் திகதி காலமானார். இவரது மறைவையிட்டு, அன்னாரது குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# நூல்கள் தேவை

மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகக் கட்டிடத்தில் (211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) இம்மாதம் 16ம் திகதியிலிருந்து இயங்கத் தொடங்கும் சைவ ஆராய்ச்சி நிலைய நூலகத்திற்கு இந்து சமயம் சம்பந்தப்பட்ட நூல்களை அன்பளிப்பாக தந்துதவுமாறு இந்து மக்களை மாமன்றம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்து மக்கள் நல்லூரிலுள்ள மாமன்றப் பிராந்திய அலுவலகத்திலும், கொழும்பிலுள்ள இந்து மக்கள் மாமன்ற தலைமையகத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நூல்களை கையளிக்கலாம்.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு தின ஆன்மீக நிகழ்வு



அகில இலங்கை இந்து மாமன்றம், விவேகானந்த சபையுடனும், இந்து வித்தியா விருத்திச் சங்கத்துடனும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு தின ஆன்மீக நிகழ்வு கடந்த (2009) டிசெம்பர் மாதம் 12ம் 13ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

முதல்நாள் நிகழ்ச்சிகள் 12ம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை அவர்களது தலைமையில் ஆரம்பமாகியது. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அன்றைய நிகழ்வின் சிறப்பு அம்சமாக சக்தி தொலைக்காட்சி அறிவிப்பாளர் திரு. ஐ. கஜமுகன் "நாவலர் இன்றிருந்தால்..." என்ற தலைப்பில் கருத்துக் களமொன்றை வடிவமைத்து நடத்தியிருந்தார். சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிவரும் "மனிதம்" நிகழ்ச்சியைப் போன்று, பார்வையாளர்கள் மத்தியிலிருந்து கருத்துக்கள் பெறப்பட்டு நிகழ்ச்சி அமைக்கப்பட்டிருந்தது.

மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி"யின் நாவலர் நினைவுச் சிறப்பிதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா சஞ்சிகையை ஆய்வு செய்து உரையாற்றினார். மாமன்றப் பிரதிச் செயலாளர் திரு. மு. கதிர்காமநாதன் வழங்கிய நன்றியுரையுடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் விவேகானந்த சபை தலைவர் திரு.ஏ.ஆர். சுரேந்திரன் தலைமையில் ஆரம்பமாகியது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அன்றைய நிகழ்வின் சிறப்பு அம்சமாக கவிஞர் ந. காண்டீபன் (சட்டத்தரணி) தலைமை தாங்கி "வழிமேல் விழிவைத்து" எனும் பொருளில் நடத்திய கவியரங்கு இடம்பெற்றது.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் "நாவலர் பெருமானின் தீர்க்கதரிசனம்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவர் திரு.க. ஜெகதீசன் வழங்கிய நன்றியுரையுடன் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

# மத்தியஸ்த சபை நிறுவ இந்து மாமன்றம் தீர்மானம்

இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களில் ஏற்படும் பிணக்குகளை மத்தியஸ்தம் செய்து தீர்த்து வைப்பதற்கு வழிவகுக்கும் வகையில் ஒரு மத்தியஸ்த சபையை நிறுவுவதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் அண்மையில் நடத்திய ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.

இந்து ஆலயங்களில் அல்லது இந்து நிறுவனங்களில் ஏதாவது பிணக்குகள் ஏற்பட்டால், அதில் சம்பந்தப்பட்டவர்கள் அப்பிணக்குகள் விடயத்தில் மத்தியஸ்தம் செய்து தீர்ப்பு வழங்குமாறு அகில இலங்கை இந்து மாமன்ற மத்தியஸ்த சபைக்கு விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பங்கள் இந்து மாமன்றத்தின் மத்தியஸ்த சபையின் விதிகளுக்கு அமைய இருத்தல் வேண்டும். அப்படி மத்தியஸ்தம் செய்யப்பட்டு வழங்கப்படும் தீர்ப்புக்கள் 1995ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மத்தியஸ்த சட்டப்படி நீதிமன்றங்களால் அமுல்படுத்த முடியும். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்த விரும்புபவர்கள், இந்து மாமன்ற தலைமையகத்தில் இயங்கும் மத்தியஸ்த சபையுடன் தொடர்பு கொள்ளலாம்.

# இருவர் இணைந்து மேற்கொள்ளும் சமூகநல செயற்திட்டம்

அகில இலங்கை இந்து மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் விடைக் கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களும், இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களும் இணைந்து மேற்கொண்டு வரும் சமூகநல செயற்திட்டமொன்றின் ஊடாக, வவுனியா நலன்புரி முகாம்களில் அவயவங்களை இழந்த நிலையில் தங்கியிருப்பவர்களுக்கு இதுவரையில் இரண்டு கட்டங்களாக வலு விழந்தோருக்கான முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக கடந்த (2009) நவம்பர் மாதத்தில் சுவிஸ் வாழ் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் பக்தர்கள் வழங்கிய 4 1/2 லட்சம் ரூபா நிதியுதவியுடன் இங்கு கொள்வனவு செய்யப்பட்ட வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிகள் வவுனியா நலன்புரி முகாமில் வைத்து வழங்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக கடந்த (2009) டிசெம்பர் மாதத்தில் 4 1/2 லட்சம் ரூபா பெறுமதியான வலுவிழந்தோருக்கான மேலும் ஒரு தொகுதி முச்சக்கர வண்டிகள் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு வழங்கப்பட்டன. உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியுதவியுடன், இவை கொள்வனவு செய்யப்பட்டன. நலன்புரி முகாம்களிலுள்ள 30 பேர் சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

மேற்படி இரு தடவைகளும் நலன்புரி முகாம்களுக்கு நேரில் சென்று சக்கர வண்டிகளை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும், வசதிகளையும் சமூகசேவை மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களது பிரத்தியேகச் செயலாளர் திரு.கே.என். தயானந்தா அவர்கள் செய்து கொடுத்திருந்தார் என்றும், சமூகசேவை மற்றும் சமூகநலத்துறை அமைச்சின் உதவியுடனும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடனும் இவை கையளிக்கப்பட்டதாகவும், வலு விழந்தோருக்கான மேலும் இன்னொரு தொகுதி முச்சக்கர வண்டிகள் விரைவில் வழங்கப்படவிருப்பதாகவும் மேற்படி சமூகநல செயற்திட்டத்தின் இணைப் பொறுப்பாளர்களுள் ஒருவரான விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா தெரிவித்துள்ளார்.


## "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்"

(சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது சமய சமூக நலப் பணிகளையும் எடுத்துச் சொல்லும் நூல் இது. அம்மையாரின் வாழ்விலிருந்து சில நிகழ்வுகள் புகைப்படங்களாகவும் இணைக்கப்பட்டுள்ளன)

**விலை :- 500/= ரூபா (தபாற் செலவு 170.00 ரூபா)**

மாமன்றத் தலைமையகத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் இந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம்

## இந்து ஒளி (காலாண்டிதழ்)

இந்து சமய அறிவை மேம்படுத்தும் வகையில் அமைந்த கட்டுரைகள், கவிதைகள், ஆன்மீக புராணக் கதைகள் உட்பட பல பயனுள்ள அம்சங்களுடன் காலாண்டிதழாக கடந்த பதின்மூன்று வருடங்களாக தொடர்ந்து வெளிவருகிறது.

| | | |
|---|---|---|
| *பிரதி ஒன்றின் விலை* | : | *ரூபா 30.00* |
| *வருடாந்த சந்தா* | : | *ரூபா 120.00* |
| *தபாற் செலவு (நான்கு இதழ்களுக்கு)* | : | *ரூபா 180.00* |

**மாமன்றத்தின் புதிய இணையத்தள முகவரி:**

www.hinducongress.lk

# மாமன்ற சமூகநலன் குழுவின் பிரதிநிதிகள் வவுனியா, மன்னார் விஜயம்

அகில இலங்கை இந்து மாமன்ற சமூகநலன் குழுவின் ஏற்பாட்டில், அதன் பிரதிநிதிகள் குழுவொன்று வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள நலன்புரி முகாம்கள், சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களைப் பார்வையிடுவதற்கும், அங்குள்ளவர்களுக்கு உதவிகள் வழங்கும் வகையிலும் கடந்த (2009) டிசெம்பர் 16ம் 17ம் திகதிகளில் விஜயமொன்றை மேற்கொண்டது.

மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களும், இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களும் இணைந்து மேற்கொண்டு வரும் சமூகநல செயற்திட்டமொன்றின் ஊடாக, வவுனியா நலன்புரி முகாம்களில் அவயவங்களை இழந்த நிலையில் தங்கயிருந்தவர்களுள் 30 பேருக்கு வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிகள் கையளிக்கும் நிகழ்விலும் இக்குழுவினர் கலந்து கொண்டனர்.

இது விடயமாக தகவல் வழங்கிய திரு. சின்னத்துரை தனபாலா, வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகம் சிறுவர் இல்லம், வவுனியா சாயி சிறுவர் இல்லம், வவுனியா அருளகம் சிறுவர் இல்லம் ஆகிய சிறுவர் காப்பகங்களுக்கு விஜயம் செய்து, அங்குள்ள பிள்ளைகளுக்கு மாமன்ற வெளியீடுகளான அப்பியாசப் புத்தகங்களையும், சிவவழிபாட்டு மலர் பிரதிகளையும், இந்து ஒளி சஞ்சிகைகளையும், மற்றும் நந்திக் கொடிகளையும் வழங்கியதாகவும், மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால், மாமன்றத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்டு வரும் அன்னதான மண்டபத்தையும் பார்வையிட்டதாகவும் தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து மன்னார் சென்ற குழுவினர், திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்தனர். பின்னர், இந்து மாமன்றப் பராமரிப்பில் நடத்தப்படும் திருக்கேதீஸ்வரம் அம்மையப்பர் முதியோர் இல்லம், வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து வெளியேறிய சிவாச்சாரியார்கள் தங்கியிருக்கும் இல்லம், மன்னாரிலுள்ள லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் சிறுவர் இல்லம், மன்னார் முதியோர் இல்லம் என்பனவற்றுக்குச் சென்று நந்திக் கொடிகள், சிவ வழிபாட்டு மலர், இந்து ஒளி பிரதிகள் மற்றும் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு அப்பியாசப் புத்தகங்கள் போன்றவைகளை வழங்கினார்கள் என்ற தகவலையும் திரு. சி. தனபாலா தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வவுனியா மன்னார் மாவட்டங்களுக்கு விஜயம் செய்த மாமன்ற சமூகநலன் பிரதிநிதிகள் குழுவில் மாமன்ற உபதலைவர் திரு. எஸ்.ரி.எஸ். அருளானந்தன், மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் திரு சின்னத்துரை தனபாலா, திருமதி கமலவேணி தனபாலா, மாமன்ற பிரதிச் செயலாளர் திரு முத்தையா. கதிர்காமநாதன், திரு.தே. கிரிதரன், சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ க.கி. நாராயணக் குருக்கள் மற்றும் லண்டனிலிருந்து வருகை தந்திருந்த ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய செயற்குழு உறுப்பினர்களான திரு. ஜெயம், திருமதி சர்வா ஜெயம் தம்பதியினர் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர். மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன், பொருளாளர் வைத்திய கலாநிதி ஆ. அரசக்கோன் ஆகியோரும் மேற்படி குழுவில் இணைந்து கொண்டு, மன்னார் மாவட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். சைவ ஆராய்ச்சி நிலையத்தின் நூலகம் திறப்பு விழாவும் ஏனைய சிறப்பு நிகழ்வுகளும்

மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகக் கட்டிடத்தில் (211/7, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) அமைந்துள்ள சைவ ஆராய்ச்சி நிலையத்தின் நூலகம், இம்மாதம் 16ம் திகதி சனிக்கிழமை முதல் இயங்கத் தொடங்குகிறது. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை அவர்கள் நூலகத்தை திறந்து வைப்பார்.

மாமன்றத்தின் உப தலைவரும், மாமன்ற யாழ். பிராந்திய செயற்பாட்டு அணியின் தலைவருமான செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையில் இந்த வைபவம் இடம்பெறும்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்து, யாழ். பல்கலைக்கழகம் திரும்பிய பட்டதாரி மாணவர்களுக்கு, லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையினதும் மனிதநேய நிதியத்தினதும் நிதியுதவியாக வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவு வழங்கும் வைபவமும் அன்றைய தினம் மாமன்ற யாழ். பிராந்திய அலுவலக மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்களின் முன்னிலையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை அவர்களும், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையைச் சேர்ந்த திரு. அ. தேவசகாயம் அவர்களும் பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய கொடுப்பனவை வழங்குவார்கள்.

ஏனைய சிறப்பு நிகழ்வுகளாக கணினிப் பயிற்சி வகுப்பு அங்குரார்ப்பணம், மாமன்றத்தின் அம்புலன்ஸ் சேவை மீளவும் ஆரம்பித்து வைத்தல், தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்து வரும் யாழ். பல்கலைக்கழக மாணவருக்கு மாமன்றத்தின் ஊக்குவிப்பு நிதி வழங்கல் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள், மாமன்ற வெளியீடுகளான இந்து மக்களுக்கு ஒரு கையேடு, சிவவழிபாட்டு மலர் வழங்கல் என்பனவும் இடம்பெறும்.


**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**ALL CEYLON HINDU CONGRESS**

To:

**General Secretary**
All Ceylon Hindu Congress
No. 91/5, Sir Chittampalam,
A. Gardiner Mawatha,
Colombo - 02.

Telephone: 011-2434990 Fax: 011-2344720 Email: hinducongress@gmail.com Website:www.hinducongress.lk


UNIE ARTS (PVT) LTD. TEL: 0112330195